1973 பிப்ரவரி 8]

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில் எங்குமில்லாத அளவுக்கு நாம் தியாகிகளுக்கு ரூ. 75 தந்து கொண்டிருக்கிறோம். ஆனால், மத்திய அரசு அவர்கள் அளிக்கும் ரூ. 200-ல் இந்த ரூ. 75-ஐ கழித்துக்கொண்டு மீதத்தைத்தான் தருவார்கள்போல் தெரிவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாநில அரசு நாங்கள் கொடுக்கின்ற ரூ. 75-ம் அப்படியே இருக்கவேண்டும், நீங்கள் கொடுக்கின்ற ரூ. 200-ஐ சேர்த்து கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை கேட்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை ஒரு யோசனையாக வேண்டுமானால் அரசுக்குச் சொல்லலாம். மத்திய அரசுக்கு வேண்டுமானால், அந்த உதவித் தொகையைப் பெறுகின்றவர்களின் சார்பிலே விண்ணப்பித்துக் கொள்ளலாம். விடுதலை வீரத் தியாகிகள் நாங்கள் 6 மாதம் சிறை சென்றிருந்தாலும் மாநில அரசிடமிருந்து ரூ. 75 தான் பெறமுடிகிறது. நீங்கள் தருகின்ற ரூ. 200-ஐத் தனியாகத் தரவேண்டுமென்று கேட்டு அவர்கள் விண்ணப்பித்துக் கொள்வது நலம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, முன்னாள் இராணுவ வீரர்களுக்கு இந்த உதவித் தொகை மட்டுமல்லாமல், தமிழக அரசு நிலப்பட்டா தந்திருக்கிறது என்று சொல்கிறார்களே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சொல்கிறார்களா என்று சந்தேகப்படவேண்டியதில்லை, உண்மைதான்.

Educational Institutions in Kanyakumari district

* 63 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the names of places where Arts and Science Colleges are to be opened for men and women respectively in Kanyakumari district?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஓரிடத்தில் கல்லூரி திறக்க அரசுக்கு கோரிக்கை வந்தால், அதனை நிறைவேற்ற அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் ரூ. 5 லட்சம் அரசுக்கு நன்கொடையாக செலுத்த வேண்டும். குறைந்தது 40 ஏக்கர் நிலம் கட்டிடத்திற்கும் விளையாட்டு மைதான வசதிக்கும் அரசுக்கு வழங்க வேண்டும். மேலும் நிரந்தரமாக கட்டிடம் கட்டும்வரை தற்காலிக வகுப்புகள் நடத்த வசதிகள் செய்து தரவேண்டும். இந்த நிபந்தனைகளைக் கூட கல்லூரி அமைக்க வேண்டிய

அவசியம் என்று ஏற்பட்டால், அந்த இடத்தில் கல்லூரி அமைப்பது குறித்து அரசு பரிசிலிக்கும். மேலும் 1972-73-ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆண்களுக்கோ, பெண்களுக்கோ தனியார் துறையில் கல்லூரிகள் அமைப்பது பற்றிய தகவல் ஒன்றுமில்லை.

திரு. என். டென்னிஸ்: அரசுக் கல்லூரி எதுவுமே இல்லாத அந்த மாவட்டத்தில் அரசு கல்லூரி ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மற்றைய மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அங்கு நிறைய கல்லூரிகள் இருக்கின்றன. தனியார் துறையிலே கூட 2 கல்லூரிகள் வேண்டுமென்று மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு சென்ற ஆண்டு விண்ணப்பம் வந்தது. ஆனால் அங்கே போதுமான அளவுக்கு கல்லூரிகள் இருப்பதாலும், இருக்கின்ற இடங்களைப் பெருக்கிக்கொள்ளலாம் என்ற அளவுக்கு மதுரைப் பல்கலைக் கழகம் அவற்றை நிறுத்தி வைத்திருக்கிறது. நான் சொன்ன நிபந்தனைகள் எல்லாம் நிறைவேறுகின்ற சூழ்நிலை இருந்தால் அதுபற்றி பரிசிலிக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரி அமைப்பதற்கு ஆலோசனை இல்லையென்று சொன்னாலும் கூட, நாகர்கோவிலில் மகளிர் கல்லூரிக்குத் தேவையிருக்கிற காரணத்தால் தனியார் துறையில் யாராவது துவக்க முன்வந்தால், அதற்கு அரசாங்கம் அனுமதி தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதுபோல் அந்த இரண்டு மனுக்களில் ஒரு மகளிர் கல்லூரிக்கும் ஒரு ஆண்கள் கல்லூரிக்கும் விண்ணப்பித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு இருந்த நிலவரத்தைக்கொண்டு மதுரைப் பல்கலைக் கழகத்தினர் அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டினுடைய நிலைமைக்கு ஏற்றபடி அதைப் பற்றி முடிவெடுக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, முன்பு ஸகாட் கிறுத்தவக் கல்லூரி இயங்கிக்கொண்டிருந்தது. இன்று அது மூடப்பட்டிருக்கிறதே, அதிலே மகளிர் கல்லூரி அமைக்க வேண்டுமென்று அந்த நிர்வாகத்திலே இருக்கின்றவர்கள் அரசாங்கத்திற்கும் பல்கலைக் கழகத்திற்கும் மனு கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே பெண்கள் கல்லூரிக்கு மிகவும் தேவை இருக்கிற காரணத்தால், அதைப்பற்றி அரசாங்கம் புனர் பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக் கழகம் அதைப்பற்றி ஆராய்ந்து அறிந்து அரசாங்கத்திற்கு அறிவிக்குமானால் அது தொடர்பாக அரசாங்கம் தக்க முயற்சிகள் மேற்கொள்ளலாம். நெய்யூர் என்ற ஊரிலே நாடார் எடுக்கேஷனல் டிரஸ்ட் பெண்கள் கல்லூரி வைக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்திருந்தார்கள். தாசன் என்பவர் குழித்துறையில் ஓர் ஆண்கள் கல்லூரி வைக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்திருந்தார். அந்த இரண்டும் போன ஆண்டு மதுரைப் பல்கலைக் கழகத்தினால் பரிசீலிக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இட வசதி இருக்கிறது என்று சென்ற ஆண்டு தெரிவித்தார்கள். இந்த ஆண்டு அவர்கள் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிப்பார்களானால், பல்கலைக் கழகக் கருத்தை அறிந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister whether with regard to backward areas where there are no colleges, the Government would relax the conditions and show consideration. ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட உத்தேசம் இல்லை.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, அரசாங்க கல்லூரிகளில் ஏழை எளிய மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளைப்போல தனியார் கல்லூரிகளிலே கொடுக்கப்படுவதில்லை. ஆகவே தனியார் கல்லூரிகளை ஏற்கும் செயற்குறிப்பு அரசாங்கத்திடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட யோசனை இல்லை.

* 64 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the student-teacher ratio is being maintained in the Primary Educational Institutions run by the Government in Kanyakumari District ; and

(b) if not, the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆசிரியர்-மாணவர் விகிதம் அரசினால் வருடாவருடம் ஒப்பளிக்கப்படும் ஆசிரியர் பதவிகளைப் பொறுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் நிர்வகிக்கப்படுகிறது.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.